

கழகத் தலைவர், தளபதியார் தமிழ்நாடு எதிர்கட்சி தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் இளந்தலைவர் ஆகியோரின் ஆதரவு பெற்ற புதுச்சேரி மாநிலம், தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தல் வெற்றி வேட்பாளர் சேது (எ) சேதுசெல்வம் அவர்களை ஆதரித்து, விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் அவர்கள், பாகம் எண்: 1, மோகன் நகர் மற்றும் திலகர் நகரில், வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் வானூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தி.கௌதம், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் இரா.ஜனகராஜ் மற்றும் விழுப்புரம் மத்திய மாவட்ட கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.

### தட்டாஞ்சாவடி - கொட்டுப்பாளையத்தில்

# கொட்டும் மழையில் தி.மு.க. வேட்பாளர் சேது செல்வம் வாக்குச் சேகரிப்பு!

## புதுச்சேரி மாநில அமைப்பாளர் இரா. சிவா தீவிர பிரச்சாரம் !

*புதுச்சேரி, செப். 23-*

புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி இடைத் தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடும் சேதுசெல்வத்தை ஆதரித்து தட்டாஞ்சாவடி தொகுதிக்கு உட்பட்ட திலகர் நகர், ராஜாஜி நகர், பாக்குமுடையான் பேட், அவ்வை நகர், பொன்னியம்மன் கோவில் வீதி பகுதிகளில் திமுக தேர்தல் பொறுப்பாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., மாநில அமைப்பாளர் இரா. சிவா ஆகியோர் தலைமையில் திமுக நிர்வாகிகள் வீடு, வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்து வருகின்றனர்.



அதன் ஒரு பகுதியாக தட்டாஞ்சாவடி தொகுதிக்கு உட்பட்ட கொட்டுப்பாளையம் பகுதியில் நேற்று மாலை திமுக அமைப்பாளர் இரா. சிவா கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் திமுக வேட்பாளர் சேதுசெல்வத்தை ஆதரித்து வீடு, வீடாக சென்று மக்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். தொடர்ந்து இன்று காலை கொட்டுப்பாளையம் மாரியம்மன் கோவில் வீதி, கோகுலன் வீதி, நாகாத்தம்மன் கோவில் வீதி, செல்வ விநாயகர் கோவில் பின்புறம் ஆகிய பகுதிகளில் திமுக அமைப்பாளர் இரா. சிவா, காலாப்பட்டு சட்டமன்ற உறுப்பினர் செந்தில் (எ) ரமேஷ் ஆகியோர் திமுக வேட்பாளர் சேதுசெல்வத்தை ஆதரித்து பிரச்சாரம் செய்தனர்.

திமுக அமைப்பாளர் இரா. சிவா பேசியதாவது:- இந்த இடைத்தேர்தல் திணிக்கப்பட்ட ஒரு தேர்தல். ரங்கசாமியை சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக, முதல்வராக, புதிய கட்சித் தலைவராக உருவாக்கிய தொகுதி தட்டாஞ்சாவடி. அப்படி தன்னை உயர்த்திய தட்டாஞ்சாவடி மக்களுக்கு முதல்வர் எந்த ஒரு நல்லத் திட்டத்தையும் செய்து கொடுக்கவில்லை. அப்படியிருந்தும் இந்த முறை முதல்வர் தொகுதி என்று நம்பி மக்கள் வாக்களித்தார்கள். அதுவும் 5 சதவீத மக்கள் வாக்களிக்கவில்லை. ஆனாலும் தொகுதியை கைகழுவி விட்டார். தற்போது பிரச்சாரத்திற்கு வரும் முதல்வர் தட்டாஞ்சாவடி தொகுதி மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதாக கூறுகிறார். மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதற்கு என்ன செய்தார் என்று தெரியவில்லை. சிறப்பு பொருளாதார மண்டலம் அமைப்போம் என்று முதல்வர் கூறியுள்ளார். தட்டாஞ்சாவடி தொழிற்பேட்டையில் அரசு இடமே இல்லாதபோது இது சாத்தியமா? மாநில அந்தஸ்து உள்ளிட்ட எந்த தேர்தல் வாக்குறுதியையும் நிறைவேற்றாத முதல்வர். அரசில் வேலைக்கு வைத்தவர்கள் எல்லாம் நீதிமன்ற வாசலில் தவம் கிடக்கின்றனர். அரசுத் துறைகளில் இன்னும் 10 ஆயிரம் பணியிடங்கள் காலியாக உள்ளது. இந்த தொகுதியில் இருந்து இவர் ஆட்சி காலத்தில் பாசிக், பாப்ஸ்கோ போன்ற சார்பு நிறுவனங்களில் பணியாற்றியவர்கள் எல்லாம் இன்று வேலையில்லாமல் உள்ளனர். நிறைய தொழிலாளர்கள் வருமானமின்றி தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

அரசுத் துறைகளில் 15 ஆண்டுகளுக்கும் மேல் பணிபுரியும் தொழிலாளர்களை அரசு இன்னும் நிரந்தரம் செய்யாமல் வஞ்சிக்கிறது. வேலையில்லா திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது. ரேஷன் பொருள் வீடுதேடி வர வேண்டாம். முறையாக மாதம் மாதம் வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை. தொடர்ந்து அரிசி போடுவோம் என்றார்கள். போடவில்லை. இப்படி எந்த ஒரு திட்டத்தையும் இந்த அரசால் செய்ய முடியவில்லை.

தி.மு.க. நிறுத்தியுள்ள வேட்பாளர் சேதுசெல்வம் இந்த தொகுதியில் பிறந்து வளர்ந்தவர். மக்களுக்காக, தொழிலாளர் வர்க்கத்திற்காக ஓய்வும், சலிப்பும் இல்லாமல் தொடர்ந்து போராடக் கூடியவர். திமுக வேட்பாளர் செல்லும் இடமெல்லாம் மக்கள் மிகுந்த வரவேற்பு அளிக்கின்றனர். ரங்கசாமி முதல்வர் ஆகிவிட்டார். அதனால் உங்களுக்குத்தான் வாய்ப்பு என்று மக்கள் பெரும் ஆதரவு தெரிவிக்கின்றனர். அவரை வெற்றி பெற வைத்தால் தொகுதி மக்களின் பிரச்சினையை சட்டமன்றத்தில் புதுச்சேரியின் குரலாக ஒலிப்பார். இவ்வாறு அவர் பேசினார்.

---

**மதுராந்தகம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் – 2026**

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக்கூட்டணிக் கட்சி**

**வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து**

**தி.மு.க. மாற்றுத்திறனாளிகள் அணிச் செயலாளர்**

## பேராசிரியர் டி.எம்.என்.தீபக்

## தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!

### மதுராந்தகம் தொகுதி

| | |
|---|---|
| 26.09.2026 சனிக்கிழமை | மோகல்வாடி ஊராட்சி |
| ” | எலப்பாக்கம் ஊராட்சி |
| ” | களத்தூர் ஊராட்சி |
| 27.09.2026 - ஞாயிற்றுக் கிழமை | வெண்மணி ஊராட்சி |
| ” | நல்லாமூர் ஊராட்சி |

தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணி சார்பில், மேற்கண்ட ஊராட்சிகளில் கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து மாநிலச் செயலாளர் டி.எம்.என்.தீபக் தலைமையில், மாற்றுத் திறனாளிகள் அணித் தலைவர் ரெ.தங்கம் மற்றும் மாநில நிர்வாகிகள் - கழகத் தோழர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்கின்றனர்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 22.09.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் சுகன்யாவை ஆதரித்து சின்னபுத்தூர் ஊராட்சி பகுதியில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் வாகன பிரச்சாரம் மேற்கொண்டார். உடன் பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி, மடத்துக்குளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், தாராபுரம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் செந்தில்குமார், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் எம்.ஜே.ராஜன் ஆகியோர் இருந்தனர்.

---





கழகத் தலைவர் தளபதியார் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆதரவு பெற்ற புதுச்சேரி மாநிலம், தட்டாஞ்சாவடி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் கு.சேது (எ) சேதுசெல்வத்திற்கு உதயசூரியன் சின்னத்திற்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க விற்கு ஒதுக்கப்பட்டுள்ள பூத்துகளில் விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி கழக நிர்வாகிகளுடன் இணைந்து வாக்கு சேகரித்தார்கள். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அனிபால் கென்னடி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் க.மும்மூர்த்தி, ஜெய.ரவிதுரை, RP.முருகன், ஜெ.ஜெயபால், வே.கில்பர்ட் ராஜ், ஒன்றிய குழு தலைவர் சங்கீத அரசி, மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.

### 5 மாத த.வெ.க. கூட்டணி ஆட்சியில்

# நாள்தோறும் வெளிவரும் சர்ச்சைகள்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

*சென்னை, செப்.23-*

5 மாத த.வெ.க.கூட்டணி ஆட்சியில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக சர்ச்சைகள் வந்து கொண்டிருக்கிறது என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.

இது குறித்து 22.09.2026 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-



தினகரன்
செப்டம்பர் 22, 2026 செவ்வாய்க்கிழமை
சர்ச்சை அரசு
தமிழ்நாட்டில் தவெக தலைமையிலான கூட்டணி ஆட்சி அமைந்து 5 மாதங்கள் கூட முடியவில்லை. ஆனால் ஆட்சியில் சர்ச்சைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வெளிவந்து கொண்டிருக்கிறது. பாலியல் புகார், போதைப்பொருள் கடத்தல், ரீல்ஸ் சர்ச்சை என த.வெ.க நிர்வாகிகள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் அணிவகுத்துள்ளன.
பழநி கோயிலுக்கு சொந்தமான பல கோடி ரூபாய் மதிப்பிலான நிலம் தனிநபர் பெயரில் சட்ட விரோதமாக பத்திரப்பதிவு செய்தது அரசியலில் பெரிய அதிர்வுகளை ஏற்படுத்தியது. சில தவெக பிரமுகர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின.
முக்கிய குற்ற வழக்குகளில் சில தவெக நிர்வாகிகள் சிக்கியது மற்றும் கைது செய்யப்பட்டது விவாதமானது. மேலும், அரசு பள்ளிகள் மற்றும்

தமிழ்நாட்டில் த.வெ.க. தலைமையிலான கூட்டணி ஆட்சி அமைந்து 5 மாதங்கள் கூட முடியவில்லை. ஆனால் ஆட்சியில் சர்ச்சைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வெளிவந்து கொண்டிருக்கிறது. பாலியல் புகார், போதைப்பொருள் கடத்தல், ரீல்ஸ் சர்ச்சை என த.வெ.க. நிர்வாகிகள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் அணிவகுத்துள்ளன.

பழநி கோயிலுக்கு சொந்தமான பல கோடி ரூபாய் மதிப்பிலான நிலம் தனிநபர் பெயரில் சட்ட விரோதமாக பத்திரப்பதிவு செய்தது அரசியலில் பெரிய அதிர்வுகளை ஏற்படுத்தியது. சில த.வெ.க. பிரமுகர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின.

முக்கிய குற்ற வழக்குகளில் சில த.வெ.க. நிர்வாகிகள் சிக்கியது மற்றும் கைது செய்யப்பட்டது விவாதமானது.

மேலும், அரசு பள்ளிகள் மற்றும் அரசு சார்ந்த நிகழ்ச்சிகளில் தவெசு நிர்வாகிகளின் தலையீடு மற்றும் செயல்பாடுகள் உருவாகின. முதல்வர் விஜய் மேட்டூர் அணை மதகுகளை திறக்கச் சென்றபோது பாதுகாப்பு மற்றும் பயண ஏற்பா டுகளுக்கு பல கோடி ரூபாய் செலவிடப்பட்டது. தவெக ஆட்சியில் ஒரு நாளைக்கு 8. 9 கொலைகள் என செய்திகள் வந்து கொண்டிருக்கிறது. இதனால் சட்டம்ஒழுங்கு சீர்குலைந்து விட்டதாகவும், ஊழல் அதிகரித்து விட்டதாகவும் எதிர்க்கட்சி தலைவர்கள் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளனர்.

லண்டனுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்ட முதல்வர் விஜய் முன்னிலையில், தமிழகத்தில் சுமார் ரூ15,300 கோடி முதலீட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாக தமிழக அரசு தெரிவித்தது. இந்தியாவில் அல்லது ஏற்கனவே தமிழகத்தில் செயல்பட்டு வரும் இந்திய நிறுவனங்களுடன் (சம்வர்தனா மதர்சன் நிறுவனம்) ஒப்பந்தம் செய்வதற்கு எதற்காக அரசு பணத்தில் லண்டன் செல்ல வேண்டும் என்று கேள்விகள் எழுகின்றன.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் சமீபத்தில் நடந்த கும்பாபிஷேக விழாவில் பல சர்ச்சைகள் உருவாகி உள்ளது. விழாவில் பக்தர்களை அனுமதிக்காதது, வி.ஐ.பி.க்களுக்கான பாஸ்களை சினிமா பிளாக் டிக்கெட் போல் விற்றது. கூட்ட நெரிசல் மற்றும் முறையான ஏற்பாடுகள் செய்யாதது போன்ற குறைபாடுகள் குறித்து கூட்டணிக் கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அறிவிக்கப்படாத மின்வெட்டு பிரச்சினை விஸ்வரூபம் எடுத்துள்ளது.

சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமை செயலகம் மற்றும் சட்டமன்றம் அமைப்பதற்கு அப்பகுதி மீனவ மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இவ்விவகாரம் தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணை அவசர கோலத்தில் இயற்றப்பட்டது என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் சண்முகம் விமர்சித்துள்ளார். த.வெ.க. அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கவில்லை என்றும், மக்கள் விரோத கொள்கைகளை தொடர்ந்து செயல்படுத்தினால் ஆதரவை திரும்ப பெற வேண்டிய நிலை வரும் என எச்சரித்துள்ளார். இது போன்று மற்றொரு கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், அரசின் செயல்பாடுகளை கடுமையாக விமர்சனம் செய்து வருகிறது.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை நிர்வகித்து வரும் இந்திய விமான நிலைய ஆணையத்துக்கு பதிலாக வேறு தனியார் நிறுவனத்தை நிர்வாகியாக நியமிக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் விஜய், ரகசிய கடிதம் எழுதியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதற்கு எந்த மறுப்பும் த.வெ.க. அரசு தெரிவிக்கவில்லை. த.வெ.க. அரசின் கூட்டணி கட்சிகளும் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளன. மொத்தத்தில் முதல்வர் விஜய் தலைமையிலான கடந்த 5 மாத ஆட்சி சர்ச்சை நிரம்பிய அரசாக இருந்து வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

### தலைமை: க.இராஜேந்திரன்! டாக்டர் கொ.நந்தகோபால கிருஷ்ணன் முன்னிலை!

# ‘மிசா’ குறித்து இழிவாகப் பேசிய முதல்வர் விஜய்க்கு கண்டனம்!

## பண்ருட்டி நகரக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

*கடலூர், செப்.23-*

பண்ருட்டி நகர கழக செயற்குழு கூட்டம், 19.09.2026, சனிக் கிழமை, காலை 11 மணியளவில்,பண்ருட்டி கும்பகோணம் சாலையில் உள்ள கே.எஸ்.ஆர்.சக்கரப் பாணி திருமண மண்டபத்தில், நகரமன்ற தலைவர், நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

கடலூர் மேற்கு மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் ஆர்.எஸ்.எம்.தணிகைசெல்வம், ஆனந்தி சரவணன், நகர கழக அவைத் தலைவர் ஆர்.ராஜா, பொருளாளர் ஆர்.கே.இராமலிங்கம்,மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ஜி.கதிர்காமன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் ப.குணசேகரன், வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பரணிச்சந்தர், மாவட்ட பிரதிநிதி ஆர். டி.ஆர்.பிரபு, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கழகத்தில் உள்ள பொறுப்புகளை, விகிதாச்சாரத்தில் சில சீர்திருத்த செயல்முறைகளை வழங்கி உள்ளதால், அதனை நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்து செயல்படுத்தி, மாவட்ட கழகத்திற்கும் தலைமை கழகத்திற்கும் முழு ஒத்துழைப்பு அளிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு அனுபவித்த கொடுமைகளை கொச்சைப்படுத்தும் விதமாக சட்டமன்றத்தில் பேசிய முதல்வர் விஜய் அவர்களை, பண்ருட்டி நகர கழகம் சார்பில் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நடைபெற உள்ள சட்டமன்ற இடைத்தேர்தலில் கழக வேட்பாளர்கள் பெரும் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற பண்ருட்டி நகர கழகம் சார்பில் தீவிரமாக தேர்தல் பணியாற்றுவோம் என தீர்மானிக்கப்பட்டது.

பண்ருட்டி நகர கழகத்தின் ஒற்றுமை மாறாமல் இருக்க, பண்ருட்டி நகரத்தை பிரிக்காமல் தற்போது உள்ளபடியே ஒரே நகர செயலாளர் என்கிற முறை தொடர வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் ராம்குமார் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் சங்கர் நவர துணை செயலாளர்கள் சசிகுமார். முன்னாள் மாவட்ட சிறுபான்மை பிரிவு துணை அமைப்பாளர் சையத் காதர் மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் துணை அமைப்பாளர் மகாலிங்கம். மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பாரி. மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் நாராயணன் நகர விவசாய அணி அமைப்பாளர் விஸ்வநாதன். நகர தொழிலாளர் அணி அமைப்பாளர் ஜாகிர் உசேன். நகர கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் தமிழ்ச்செல்வன். நகர இளைஞரணி அமைப்பாளர் சம்பத். நகர மாணவரணி அமைப்பாளர் பார்த்திபன். நகர இளைஞரணி துணை அமைப்பாளர் பாலச்சந்தர் ராஜ் முஹம்மது.விக்கி. நகர தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் மோகன் நகர சமூக வலைதள பொறுப்பாளர் பாலாஜி உள்ளிட்ட வார்டு செயலாளர்கள் வட்ட பிரதிநிதிகள் முன்னாள் இன்னாள் நகர மன்ற உறுப்பினர்கள் கழகத்தின் அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் சட்டமன்ற தனி தொகுதியில் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் பரந்தாமன் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார் இவரை ஆதரித்து மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுரப்பாக்கம் வடக்கு ஒன்றியம் அகிலி, மாத்தூர், ஊனமலை, சிறு நாகலூர் ஊராட்சிக்கு உட்பட்டநிர்வாகிகள் மற்றும் விழுப்புரம் வடக்கு மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் மாத்தூர் ஊராட்சியில் நடைபெற்றது.கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டசெயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேது நாதன் தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார் ,நெடுஞ்செழியன், அச்சிறுப்பாக்கம் ஒன்றிய செயலாளர் தம்பு,ஒன்றிய கவுன்சிலர் சிலம்பரசன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்